<u>தேதி - 17.11.2022 அசல் வழக்கு எண்.148/2010 பி.சா.3 (விஜயபாரதி)</u>

<u>28 ம் பிரதிவாதி (**R**.முத்துராமலிங்கம்) தரப்பு குறுக்குவிசாரணை</u>

வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கொடிவழிஜாபிதாவில் கண்டுள்ள விபரங்கள் சரிதான். தாவா 3 ம் லக்கச் சொத்தினை பொறுத்து நானும், வாதிகளும் சேர்ந்து தான் 28 ம் பிரதிவாதியான முத்துராமலிங்கம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா 3 ம் லக்கச் சொத்தை பொறுத்து எனக்கும், வாதிகளுக்கும் எந்தவிதமான பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரிதான். தாவா 8 ம் லக்கச் சொத்தான புலஎண். 123/10 செண்டு 15 உள்ள சொத்தினை 28 ம் பிரதிவாதியான முத்துராமலிங்கம் தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். ஆனால் மேற்படி விபரம் எனக்கு தற்போது தான் தெரிய வந்தது. தாவா 8 ம் லக்கச் சொத்தினை கிரையம் செய்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை. அதை வாதிகள் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா 3 மற்றும் 8 வது லக்கச் சொத்துக்கள் 28 ம் பிரதிவாதிக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து என்பதல் அதில் எனக்கோ, வாதிகளுக்கோ எந்த விதமான பாகமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

3, 8, 9, 16, 17 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

23, 24 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.